பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 29 திங்கட்கிழமை 15.12.2025 கதிர் 037

## இனி இது ரகசியம் அல்ல!

இந்து சமய மற்றும் மறுவாழ்வு முன்னாள் அமைச்சரும் மஜக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மகேஸ்வரன் ☞ 2

# அரசுத் தலைவர் நிதியம் மக்கள் நிதியமே என்ற உணர்வை ஏற்படுத்தியிருக்கிறோம்

## பிரதமர் ஹரினி பெருமிதம்






அரசுத் தலைவர் நிதியம் என்பது மக்களின் நிதியம் , அது மக்களுக்குச் சொந்தமானது என்ற உணர்வை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். விசேட அதிகாரம் அல்லதுபதவிகளை வகிப்பவர்கள் மாத்திரம் நன்மையைப் பெறுவதற்கு இலகுவாக இருந்த, சாதாரண மக்கள் பயனடைவது கடினமானதும் ☞ 2

# நாளை முதல் மீண்டும் மழை அதிகரிக்கலாம்

கிழக்கு அலை வடிவ காற்றழுத்த தாக்கம் காரணமாக நாளை முதல் (16) நாட்டில் மழையுடனான வானிலையில் சிறிது அதிகரிப்பை எதிர்பார்க்க முடியும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய,கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யக்கூடும்.அத்துடன், நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் 1.00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும்,வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்திற்கு 30-40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும். அத்துடன், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் ☞ 6

# போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிக்க முடிந்த அனைத்தையுமே செய்யத் தயார்

## திருகோணமலை கடற்படைத் தளத்தில் அநுரகுமார சூளுரை





போதைப்பொருள் அச்சுறுத்தல் ஒரு தொற்று நோய். அது முடிவுக்கு வரவேண்டும்.நமதுதேசம்அதிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். ஓர் அரசியல் அதிகாரம் என்ற வகையில், அதற்காக எங்களால் முடிந்த அனைத்தையும் செய்யநாங்கள்தயாராகஇருக்கிறோம் என்று அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.

திருகோணமலை கடற்படை மற்றும் கடல்சார் பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளை முடித்து வெளியேறிய படையினரின் அணிவகுப்பில் கலந்துகொண்டு ஆற்றிய உரையில் இதனைத் தெரிவித்தார். அவர் ☞ 2

# உதவிக் கொடுப்பனவுகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு தெளிவுபடுத்தல்

பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவிகளுக்கான வழிகாட்டல்களைச் சுட்டிக்காட்டி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்த (ஓய்வுநிலை) விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் ☞ 6

# பேரிடர் உதவி கேட்டு வெருகலில் மக்கள் முற்றுகைப் போராட்டம்

பேரிடரால் பாதிக்கப்பட்ட தமக்குப் போதியளவுஉதவிகளைவழங்குமாறுகோரி திருகோணமலைமாவட்டம்,வெருகல்பிரதேச செயலகத்தை சனிக்கிழமை முற்றுகையிட்ட மக்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சீரற்ற கால நிலை காரணமாகவும் மாவிலாறுஅனைக்கட்டுஉடைப்பெடுத்ததால் வெருகல் பகுதியில் பல சேதங்கள் ஏற்பட்டன. இதனால் பாதிக்கப்பட்ட தங்களுக்கென அனுப்பப்பட்ட உதவிப் பொருட்களை அலுவலகத்தில் பூட்டிவைக்காது பகிருமாறும் கோரியே அவர்கள் போராட்டத்தில் ☞ 6

# உதவிப் பொருள்களுடன் மற்றொரு இந்திய விமானம் வந்து சேர்ந்தது

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான மிகப்பெரிய சரக்கு விமானமான சி-17 (ஸீ-17) ரக விமானம் ஒன்று நேற்றுப் பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்தியாவின் ஆக்ரா நகரிலிருந்து புறப்பட்ட இந்த விமானத்தில் 25 மெட்ரிக் தொன் எடையுள்ள, நாட்டின் சுகாதார சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான 17 வகையான அத்தியாவசிய மருந்துகள்மற்றும்பெருமளவிலான உலர் உணவுப் பொருட்கள் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேரிடர் உதவி உதவிப் ☞ 6

# நெருக்கடி முகாமை தெரியாவிட்டால் சொல்லித் தருவதற்கு நாம் தயார்

## நாமல் ராஜபக்ச ஆளும்தரப்பைப் பார்த்து எகத்தாளம்

பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவது தொடர்பில் அரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில்குறிப்பிட்டவிடயங்களுக்கும், மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் குறிப்பிடும் விடயங்களுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன. நெருக்கடிநிலமையைமுகாமைத்துவம் செய்வது எவ்வாறு என்பது தொடர்பில் ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

படுகொலை வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர் ஜோன்சன் கொலின் வலன்டினோ. அவருக்குக் கொலைத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்தவர் என்றபோதும்கூட, அவரும் இன்னும் விடுவிக்கப்படாதுள்ள அரசியல் கைதிகளில் ஒருவராகவே கருதப்படுபவர்.

மகேஸ்வரன் கொலையை யார் செய்வித்தார்கள் என்பது தொடர்பில் ஒரு பெரும்சர்ச்சைநிலவிவந்தாலும்வலன்டினோ விடுதலைப் புலிகள் உறுப்பினர் என்றே நீதிமன்றத்தில்நிறுத்தப்பட்டுக்குற்றவாளியாகக் காணப்பட்டவர். அவர் தனது தண்டனையை எதிர்த்து முன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

தன்னைக் குற்றவாளி என்று கொழும்பு மேல்நீதிமன்றம்வழங்கியதீர்ப்பைஎதிர்த்தே அவர் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்திருந்தார். அங்கும் மேல் நீதிமன்றத் தீர்ப்பை உறுதிப்படுத்தியே, அதாவது வலன்டைனுக்கு விதிக்கப்பட்ட கொலைத் தண்டனையை உறுதிப்படுத்தியே தீர்ப்பு வழங்கப்பட்டது. பின்னர் அதனையும் எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார் வலன்டைன்.

நீதியரசர்களான யசந்த கோதாகொட, அச்சல வெங்கப்புலி மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற ஆயத்தின் முன்பாக அந்த மனு விசாரிக்கப்பட்டு வந்தது. எனினும் கடந்த தவணையின்போது அந்த மனுவைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக வலன்டைன் சார்பில் மன்றில் முற்படும் அரசுத் தலைவர் சட்டத்தரணி ஷவிந்திர பெர்னான்டோ நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

வழக்கின்போது முன்வைக்கப்பட்ட இரண்டு உண்மைகளை நிரூபிக்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியாததால் மனுவை மீளப் பெற அனுமதிக்குமாறு கோரினார். நீதிமன்றம் அதற்கு அனுமதி வழங்கியது. அதன் மூலம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்ட கொலைத் தண்டனைத் தீர்ப்புடனேயே கொலன்டைன் எஞ்சிய காலத்தைக் கழிக்கவேண்டும்.

2008 ஆம் ஆண்டு ஜனவரி 1 கொழும்பு - பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலில் வைத்து மகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார். காயமடைந்த மகேஸ்வரன், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில், தன்னைச் சுட்டவர் இவர்தான் என்று குற்றவாளியை அடையாளம் காட்டியிருந்தார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவத்தின்போது மகேஸ்வரின் மெய்ப்பாதுகாவலர் நடத்திய பதில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த குற்றவாளியின் குருதி மாதிரியும் மரபணு சோதனை மூலம் குற்றத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

இந்த உண்மைகளை மறுக்க முடியாது என்பதை ஏற்றுக்கொண்ட சட்டத்தரணி, மனுவை மீளப் பெற அனுமதி கோரினார். இதனை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம், மனுதாரரின் கோரிக்கையை அனுமதித்தது.

இந்தச் சமயத்தில் மற்றொரு விடயமும் ஞாபகத்திற்கு வருகின்றது. மைத்திரி - ரணில் நல்லாட்சிக் காலத்தில் அரசியல் கைதிகளின் விடயத்தில் தொடர்பில் கொள்கை முடிவு எடுத்து அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்தி வந்தார். அதற்கு அப்படி அனைவரையும் விடுவிக்க முடியாது. தண்டனை பெற்றவர்களை விடுவிப்பதில் சில பல நிபந்தனைகள், தடைகள் இருக்கின்றன என்று ரணில் மறுத்து வந்தார். அதில் ஒரு உதாரணமாக வலன்டைனின் வழக்கும் அரசுத் தரப்பிலிருந்து காட்டப்பட்டது.

வலன்டைனுக்கு அரசுத் தலைவர் மன்னிப்பு வழங்கமுடியும். ஆனால் அதற்கு அவரால் கொலை செய்யப்பட்டவரான மகேஸ்வரனின் குடும்பத்தினரின் அனுமதி பெறப்படவேண்டும். முன்னாள் அரசுத் தலைவர்களான சந்திரிகா, மைத்திரிபால ஆகியோரின் கொலை முயற்சி வழக்குகளில் கைதாகித் தண்டனை பெற்றவர்களை விடுவிப்பதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்தமையால் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. ஆனால், மகேஸ்வரனின் குடும்பத்தினரிடமிருந்து அத்தகைய கோரிக்கை தொடர்பில் எந்தப் பதிலும் கிடைக்காத காரணத்தால் வன்டைனை விடுவிக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டது.

இப்போது வலன்டைன் தனது உயர் நீதிமன்ற மனுவை விலக்கிக் கொண்டதன் பின்னால் அவருக்கு மன்னிப்பு வழங்குவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளதோ என்பது எனக்குத் தெரியாது. மகேஸ்வரன் குடும்பத்தினரிடம் இருந்து அவரது விடுதலைக்கான சம்மதம் கிடைக்கப் பெற்றிருந்தால் அவர் அரசுத் தலைவரின் மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படுவதற்கான வாய்ப்பு உண்டு. தற்போது சிறையில் உள்ள 8 அரசியல் கைதிகளை விடுவிப்போம் என்று தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்திருந்தது. ஆனால், அவர்களில் பலரும் தண்டனை பெற்ற கைதிகள் என்பதால் அவர்களை அரசுத் தலைவரே மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யமுடியும் என்ற சூழலே இருக்கின்றது. அதிலும் வலன்டைனது போன்ற சில வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களது குடும்பத்தினரின் கருத்துக்களும் முக்கியம் என்கிற நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை தேசிய மக்கள் சக்திக்கு ஒரு சிக்கலான விவகாரமாகவே இருக்கிறது. இந்த நிலையில் மகேஸ்வரன் குடும்பத்தினரின் அனுமதி கிடைத்தால் லன்டைனின் விடுதலை சாத்தியமாகக்கூடும் என்றே கருதுகின்றேன். .

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## போதைப்பொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

இவ்வளவு மரியாதைக்குரிய, அச்சமற்ற மற்றும் ஒழுக்கமான தொழில்முறை தொழிலைத் தேர்ந்தெடுத்ததற்காக உங்கள் பெற்றோர் உங்களைப் பற்றி மிகவும் பெருமைப்படுகிறார்கள். இந்தத் தொழிலின் கண்ணியத்தையும் மதிப்பையும் காப்பாற்றி, உங்கள் பெற்றோரைப் பெருமைப்படுத்தக்கூடிய ஒரு பிள்ளையாக இந்தத் தொழிலில் நீங்கள் முன்னேறுவீர்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். உங்கள் பெற்றோரைப் போலவே, ஒரு நாடாக நாங்களும் உங்களுக்காக மிகுந்த எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளோம்.

இலங்கையின் கடற்கரை பிரதேசம் சுமார் 1,340 கிலோ மீற்றர். நாம் ஒரு தீவு நாடு. நமது நாட்டை விட சுமார் எட்டு மடங்கு கடல் பகுதி எங்களிடம் உள்ளது. சுமார் இருபத்தேழு மடங்கு பாதுகாப்பைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உள்ளது. எனவே, நாடு உங்களை பார்த்துக் கொண்டிருக்கிறது. தாய் நாட்டின் பாதுகாப்பிலும், பொதுமக்களின் பாதுகாப்பிலும் உங்களுக்கு பெரும் பங்கு உள்ளது. அந்தப் பங்கை நீங்கள் சரியாக நிறைவேற்றுவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அந்தக் கண்ணியத்தையும், அந்தத்த தொழில் முறையையும் நீங்கள் பாதுகாப்பீர்கள் என்று எங்களுக்கு வலுவான நம்பிக்கை உள்ளது.

நமது கடற்படைக்கு ஒரு புகழ்பெற்ற வரலாறு உள்ளது. நமது நாடு எதிர்கொண்ட பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நமது தாயகத்தின் பாதுகாப்பிற்காகவும், பொதுமக்களின் பாதுகாப்பிற்காகவும் பெரும் தியாகங்களைச் செய்த ஒரு கடற்படை எங்களிடம் உள்ளது. இவ்வளவு புகழ்பெற்ற வரலாற்றைக் கொண்ட, மக்களின் பாதுகாப்பில் பெரும் பங்கை ஏற்றுக்கொண்ட தாயகத்தின் பாதுகாப்பிற்காக ஒப்பற்ற சேவையைச் செய்த கடற்படையில் நீங்கள் இணைகிறீர்கள். எனவே, இன்று, அந்தப் பெருமைமிக்க கடற்படையின் புகழ்பெற்ற வரலாற்றின் எதிர்கால படைப்பாளர்களாக மாறுவதற்கான முக்கிய பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள மூத்த அதிகாரிகள் உங்களைப் கவனிக்கிறார்கள். உங்கள் மூத்த அதிகாரிகள் மிகுந்த மரியாதையுடனும் பெருமையுடனும் தாங்கள் கட்டியெழுப்பிய இந்தக் கடற்படையை, அந்த மரியாதையுடனும் பெருமையுடனும் நீங்கள் பொறுப்பேற்று, எதிர்காலத்தில் பாதுகாப்பாக வழிநடத்துவீர்கள் என்ற வலுவான நம்பிக்கை கொண்டுள்ளனர். நமது நாட்டிற்கும் மக்களுக்கும் பெரும் பொறுப்பைக் கொண்ட ஒரு தொழில் இது

இன்று நாம் எதிர்கொள்ளும் பல சவால்கள் உள்ளன. அந்தச் சவால்களில், ஒருபுறம், பொருளாதார மட்டத்தில் சவால்கள் உள்ளன. மறுபுறம், சட்டத்தின் ஆட்சியை நிறுவுவதில் சவால்கள் உள்ளன. மேலும் சமூக குற்றங்களைத் தடுப்பதில் சவால்கள் உள்ளன. மறுபுறம், நமது நாடு ஒரு பேரழிவில் இருக்கும்போது அதை மீட்டு பாதுகாப்பான வாழ்க்கையை உருவாக்குவதில் சவால்கள் உள்ளன. எனவே, ஒரு நாடாக, நாம் பல சவால்களை எதிர்கொள்கிறோம்.

குறிப்பாக, நமது நாடு கடந்த காலத்தில் ஒரு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த பொருளாதார நெருக்கடியால் நீங்கள், நாங்கள், எங்கள் பெற்றோர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பேரழிவை சந்தித்தோம். சிலர் வரிசையில் காத்திருந்து இறந்துள்ளனர். சில தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அந்தப் பொருளாதாரச் சரிவு நமது நாட்டின் ஒவ்வொரு துறைக்கும் பரவத் தொடங்கியது. ஆனால் இன்று, நமது பொருளாதாரம் மெதுவாக ஆனால் முறையாக கட்டமைக்கப்படுகிறது.

1977க்குப் பிறகு 2025இல் மிகக் குறைந்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை பதிவு செய்யப்பட்டது. 2006க்குப் பிறகு ஆளும்தரப்பு அதிக வருவாயைப் பதிவு செய்யும் ஆண்டாக இது மாறியுள்ளது. அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு புலம்பெயர்ந்தோரின் ஆண்டாகவும், அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் ஆண்டாகவும் இதை மாற்றும் இலக்கையும் நாங்கள் கொண்டிருந்தோம். இந்த வெள்ளம் மற்றும் புயலகளால் நாம் ஒரு பேரழிவை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த பேரழிவு நாம் சீராகக் கட்டமைத்து வரும் பொருளாதாரத்தின் மீதான ஒரு சக்திவாய்ந்த தாக்கம் என்பதை நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம். ஆனால், இதுபோன்ற ஒரு துயரம் மற்றும் சவாலை எதிர்கொண்டு ஓடிப்போவதோ அல்லது அதிர்ச்சியில் வாழ்வதோ நமது பொறுப்பு அல்ல. இந்த தாய்நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப உறுதியுடன் செயல்படுவதே நம் அனைவரின் பொறுப்பு.

இந்தப் பேரிடரில் நமது கடற்படை மேற்கொண்டபங்களிப்பும் அவர்களுக்குள்ள பங்கும் மிகப்பெரியது என்று நான் நினைக்கிறேன். இந்த பேரழிவில் நாங்கள் ஏராளமான உயிர்களை இழக்கும் தருவாயில் இருந்தோம். அந்த நேரத்தில், நமது வீரமான படைகள் ஒரு பெரிய பங்களிப்பைச் செய்தன. கலா ஓயா அருகே ஒரு பஸ்ஸில் சுமார் அறுபத்தொன்பது பேர் கூரையில் இருந்தனர். அவர்கள் வாழ்க்கைக்கும் சாவிற்கும் இடையிலான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். 18 மணி நேரத்திற்கும் மேலாக, ஒரு பெருவெள்ளம், சூறாவளி மற்றும் கனமழையில் மக்கள் அந்தக் கூரையில் இருந்தனர்.

சாவின் பயங்கர அனுபவத்தை அனுபவித்தனர். அந்த மக்களை மீட்பதில் நமது கடற்படையின் பங்கு மகத்தானது என்பதை நான் அறிவேன். முதலில், அவர்களை மீட்கப் போன படகின் அதிகாரிகள் விபத்தில் சிக்கிய பிறகு, அவர்களும் கூரையில் சிக்கினர்.

பொதுமக்களுக்கு உயிர்வாழ்வதற்கான எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் கொண்டு வந்து அவர்கள் தைரியத்தை வழங்கினார்கள். மேலும், திருகோணமலையில் இருந்து ஒரு அவசர படகு மற்றும் விசேட பயிற்சி பெற்ற குழு அதிகாலை 3.30 மணியளவில் அவர்களை மீட்பதற்காக அந்தப் பகுதிக்குச் சென்றன. அவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து மக்களை மீட்பதில் பெரும் பங்காற்றினர். மேலும், சுண்டிக்குளத்தில் உள்ள முகத்துவாரத்திற்கு அருகில் மக்களை மீட்பதில் ஈடுபட்டிருந்தபோது, கடற்படை அதிகாரிகளில் ஐந்து பேரை இழந்தோம்.

நீங்கள் இன்று எவ்வளவு சிறந்த மற்றும் கௌரவமான தொழிலில் ஈடுபடுகிறீர்கள் என்பதை அண்மைய உதாரணங்கள் மட்டுமே நமக்குக் காட்டியுள்ளன. இந்த தருணத்திலும்கூட, மண்சரிவு மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மிகவும் ஆபத்தான இடங்களில், நமது நாட்டு மக்களின் வாழ்க்கையை மீட்டெடுப்பதில், நமது நாட்டு மக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் சிறந்த பணியைச் செய்யும் நமது துணிச்சலான அதிகாரிகள் உள்ளனர். எனவே, நீங்கள் மிகவும் கௌரவமான மற்றும் தொழில்முறை இராணுவத்தில் நுழைகிறீர்கள் என்பதை நான் உங்களுக்கு மீண்டும் கூறுகிறேன்.

இன்று ஒரு நாடாக நாம் எதிர்கொள்ளும் முக்கிய சவால் போதைப்பொருள் அச்சுறுத்தலாகும். வான்வழி அல்லது கடல் வழியாக போதைப் பொருட்கள் நாட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. இந்தப் போதைப்பொருள் அச்சுறுத்தலிலிருந்து நம் நாட்டை விடுவிக்க வேண்டுமென்றால், வான்வழி மற்றும் கடல் வழியாக நம் நாட்டிற்குள் போதைப்பொருள் எடுத்து வரப்படுவதைத் தடுக்கவேண்டும்.

இந்தப் போதைப்பொருள் வலையமைப்பு வெறும் போதைப்பொருள் வர்த்தகம் மட்டுமல்ல என்பதை நாம் அறிவோம். இது மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் கும்பலாகும். அவர்களிடம் ஆயுதங்கள் உள்ளன. அவர்களிடம் நிறைய பணம் உள்ளது. அவர்களிடம் சர்வதேச குற்றவியல் கும்பல்களின் தொடர்புகள் உள்ளன. சிறிது காலமாக அவர்களுக்கு மிக நெருக்கமான அரசியல் உறவுகள் இருந்தன. அவர்கள் பெற்றுள்ள நிதிப் பலம், நமது அரச இயந்திரத்தில் பலவீனமான அதிகாரிகளை விலைக்கு வாங்க அவர்களுக்கு உதவியது. நம் நாட்டில் இவ்வளவு பரவலான போதைப்பொருள் வலையமைப்பு உள்ளது. அந்த போதைப்பொருள் வலையமைப்பை உடைக்க, ஒரு ஆளும்தரப்பு என்ற வகையிலும், பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகள் என்ற வகையிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாக நான் நினைக்கிறேன். ஒரு நாடென்ற வகையில், நமது இளம் தலைமுறையை விழுங்கி வரும் இந்த பேரழிவிலிருந்து நமது நாட்டை விடுவிக்க நாங்கள் ஒரு முடிவை எடுத்துள்ளோம்.

உங்கள் மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கையின் காரணமாக இவ்வாறு கூறுகிறேன். கடலைப் பாதுகாப்பது நீங்கள்தான். கடலில் இருந்து நிலத்திற்கு கொண்டு வரப்படும் போதைப்பொருட்கள் மீதான சோதனைகளை மேற்கொள்பவர் நீங்கள்தான். அண்மைக் காலங்களில், நமது கடற்படைத் தளபதியின் தலைமையில், அனைத்து அதிகாரிகளும் கூட்டாக பல பெரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதை நான் அறிவேன். அண்மைய வரலாற்றில், அதிக அளவு போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஆனால் அது இன்னும் முடிவடையவில்லை.

எனவே, இந்தப் போதைப்பொருள் அச்சுறுத்தல், இந்த தொற்று நோய் முடிவுக்கு வர வேண்டும். நமது தேசம் அதிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். ஒரு அரசியல் அதிகாரம் என்ற வகையில், அதற்காக எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். குறிப்பாக உங்களுக்கு அதில் ஒரு பெரும் பங்கு உள்ளது. ஒன்றாக, இந்த பேரழிவிலிருந்து நமது தாய் நாட்டை விடுவிப்போம். அதற்கு உங்கள் பங்களிப்பை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

எங்களுக்குத் தனித்தனிப் பொறுப்புகள் உள்ளன. அரசுத் தலைவராக, எனக்கு ஒரு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. எங்கள் கடற்படைத் தளபதியின் பதவிக்கு ஏற்ப ஒரு பொறுப்பு உள்ளது. உங்கள் பதவிக்கு ஏற்ப உங்களுக்கு ஒரு பொறுப்பு உள்ளது. . ஒவ்வொருவரும் தங்களுக்குஒப்படைக்கப்பட்ட பொறுப்பை சரியாக நிறைவேற்றினால் மட்டுமே ஒரு நாடு முன்னேற முடியும். எனவே, எந்தவொரு தொழிலையும் அல்லது பொறுப்பையும் இரண்டாம் பட்சமாகக் கருதக்கூடாது. ஒவ்வொரு பொறுப்பும் நமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு செய்யப்படும் பங்களிப்பின் ஒரு பகுதியாகும். அந்தப் பொறுப்புகளின் எடையும் தன்மையும் மாறுபடலாம். ஆனால் நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை தோள்களில் சுமக்கிறோம்.

ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை நாம் அனைவரும் ஒன்றாக நிறைவேற்றுவோம். இன்று முதல் உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை முறையாக நிறைவேற்றும் ஒரு புதிய அதிகாரியாக மாற உங்களை அழைக்கிறேன். வெற்றிகரமான தொழில்முறை முன்னேற்றத்திற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நெருக்கடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தலைவருக்கும், ஆளும்தரப்புக்கும் ஆலோசனை வழங்கத் தயாராக உள்ளோம் என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்றளவில் போதுமான உதவி கிடைக்கவில்லை. அதேபோல் உதவி நிதியும் கிடைக்கவில்லை. பெரும்பாலானவர்களை ஆளும்தரப்பு கவனத்திற் கொள்ளவில்லை.

பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவது தொடர்பில் அரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட விடயங்களுக்கும், மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் குறிப்பிடும் விடயங்களுக்கும்

தொடர்ச்சி 6ம் பக்கம்....


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அவசர உதவிகள் மட்டுமே போதுமானதல்ல

'தித்வா' சூறாவளி ஒய்ந்த பிறகும், அதன் உண்மையான பாதிப்புகள் இன்னும் ஆயிரக்கணக்கான குடும்பங்களைத் தொடர்கின்றன. வெள்ள நீர் வடியலாம்; மண் சரிவுகளின் அபாயம் குறையலாம். ஆனால் பேரிடருக்குப் பிறகான வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப தேவையான அடிப்படை அமைப்புகள் செயல்படாத நிலையில் இருப்பதே இன்றைய மிகப்பெரிய நெருக்கடி. இது இலங்கையில் புதிதான சவாலல்ல. ஆனால் ஒவ்வொரு பேரிடருக்குப் பின்னரும் தீர்க்கப்படாமல் மீண்டும் மீண்டும் தலைதூக்கும் பழைய பிரச்சினை.

பாதிக்கப்பட்ட மக்களின் துன்பம் வீடுகள் அழிந்ததோடு முடிவடையவில்லை. அடையாளம், நிதி அணுகல், அரசுச்சேவைகள் என்ற அடிப்படைக் கட்டமைப்புகள் என்பவை ஒரே நேரத்தில் சிதைந்துள்ளமை அந்த மக்களைப் பாதிக்கும் மிகப் பெரிய பிரச்சினைகள். பல வெள்ளப் பகுதிகளிலும், மண் சரிவு அபாயம் உள்ள இடங்களிலும் வாழும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இன்னும் ஓய்வூதியங்கள் கிடைக்கவில்லை. பலர் வங்கி சேமிப்பு புத்தகங்கள், ஏ.டி.எம். அட்டைகள், தேசிய அடையாள அட்டைகள் போன்ற முக்கிய ஆவணங்களை வெள்ளத்தில் இழந்துள்ளனர். இவ்வாவணங்கள் இல்லாமல், வங்கித் தொடர்பான சேவைகள் எட்டாக்கனியாக மாறியுள்ளன.

அரசு உதவித் திட்டங்கள், இழப்பீடுகள், சமூக பாதுகாப்புத் தொகைகள் அனைத்தும் நடைமுறையில் இருப்பதாக அறிவிக்கப்படுகின்றன. ஆனால் ஆவணங்களை இழந்தவர்களுக்கு அவை காகிதத்தில் மட்டுமே உள்ள வாக்குறுதிகளாகவே தங்குகின்றன. இதன் மூலம் இலங்கையின் பேரிடர் முகாமைத்துவ கட்டமைப்பில் உள்ள ஒரு பெரிய குறைபாடு வெளிப்படுகிறது. பேரிடருக்குப் பிறகும் மக்கள் வழக்கமான நிர்வாக முறைகளில் தங்களை இணைத்துக்கொள்ள முடியும் என்ற தவறான முன் நிபந்தனையிலேயே அந்த அமைப்பு செயல்படுகிறது. ஆனால் பேரிடர் என்றால் அதுவே அந்த அடித்தளங்களை அழிக்கும் நிகழ்வு.

இதன் விளைவாக ஒரு கொடூரமான முரண்பாடு உருவாகிறது. அரசு உணவுப் பொதிகளை வழங்குகிறது. ஆனால் மக்கள் பண உதவியைப் பெற முடியாமல் நிற்கின்றனர். தற்காலிக தங்குமிடங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் நீண்டகால வீட்டு உதவிகள் தாமதமாகின்றன; காரணம், பயனாளிகள் தங்களை நிரூபிக்க முடியாத நிலை தொடர்வதே. உயிர்வாழ்தல் ஒருபுறம் உறுதி செய்யப்படுகிறது. அதேநேரம் விரைந்து செயற்பட்டிருக்கவேண்டிய மீட்பு மறுபுறம் முடங்குகிறது.

இந்த நிலை மிகவும் பாதிப்புக்குள்ளாகும் சமூகங்களுக்குத் தீவிரமான அபாயமாக மாறியுள்ளது. சிறுநீரக நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் போன்றவர்கள் தொடர்ச்சியான மருத்துவ சேவைகளையும் அரசுத் துணைகளையும் சார்ந்தவர்கள். பலர் தங்கள் மருத்துவ பதிவுகள், கிளினிக் புத்தகங்கள், மருந்துச் சீட்டுகளை இழந்துள்ளனர். அவற்றுக்கு மாற்று ஏற்பாடுகள் இல்லையெனில், உயிர் காக்கும் மருந்துகள்கூடக் கிடைக்காமல்போகும் அபாயம் உள்ளது. ஏற்கனவே சுகாதார அணுகலில் சவால்களை எதிர்கொள்ளும் நாட்டில், இது மிகக் கடுமையான நிலை.

இதனால், பேரிடர் மேலாண்மையில் அடிப்படை அணுகுமுறை மாற்றம் அவசியமாகிறது. உணவு வழங்குவதில் மட்டும் உதவி தங்கி நிற்றல் போதாது. அரசு உடனடியாகச் செயல்படும், அதிகாரம் பெற்ற மொபைல் சேவை அணிகளை பேரிடர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் களமிறக்க வேண்டும். இவை பெயரளவிலான ஆய்வுப் பயணங்களாக அல்ல; தேசிய அடையாள அட்டைகள் மறுபதிப்பு, சிவில் ஆவணங்கள் மீள வழங்கல், வங்கிகளுடன் ஒருங்கிணைந்து நிதி அணுகலை மீட்டெடுக்கும் முழுமையான சேவைகள் என்று எல்லாவற்றையும் வழங்கும் மையங்களாக இருக்கவேண்டும்.

புதிய அடையாள ஆவணங்களை வங்கிக் கணக்குகளுடன் இணைத்தல், மாற்று ஏ.டி.எம். அல்லது வங்கி அட்டைகள் வழங்குதல் ஆகியவை அவசர முன்னுரிமையாகக் கருதப்படவேண்டும். இதற்கான தொழில்நுட்பமும் நிறுவனத் திறனும் இலங்கையில் ஏற்கனவே உள்ளன. தேர்தல் காலங்களிலும், சிறப்புப் பதிவுத் திட்டங்களிலும் மொபைல் ஆவண சேவைகள் முன்னதாக வெற்றிகரமாக செயல்பட்டுள்ளன. மக்களின் வாழ்வாதாரம், உதவி அணுகல் இவ்வாவணங்களின் மீதே சார்ந்திருக்கையில், தாமதத்திற்கு எந்த நியாயமும் இல்லை.

சுகாதாரத் துறையிலும் அதேபோன்ற அவசர மாற்றங்கள் தேவை. நீண்டகால சிகிச்சை பெறும் நோயாளிகள் தமது மருத்துவப் பதிவுகளை இழந்திருந்தால், மருத்துவமனைகள் மற்றும் பிராந்திய சுகாதார அலுவலகங்கள் உடனடியாக மாற்று ஆவணங்களை வழங்கவேண்டும். இந்தப் பேரிடர் காலத்தில் உறுதிப்படுத்தல் நடைமுறைகள் எளிமைப்படுத்தப்படவேண்டும். கிராம மட்ட உறுதிப்பத்திரங்கள், உறுதிமொழிகள் தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். ஒரு காகிதத்தை இழந்ததற்காக ஒருவருக்கு மருந்தோ சிகிச்சையோ மறுக்கப்படக்கூடாது.

வீடமைப்புச் சிக்கலும் இன்னும் தீராத புண்ணாகவே உள்ளது. உணவு வழங்கல் அவசியமானது. ஆனால் நிரந்தர வாழ்விடமின்றி இருக்கும் குடும்பங்களின் ஆழமான அச்சங்களை அது தீர்க்காது. இழப்பீடுகள், வீடு கட்டும் உதவித் தொகைகள், மறுசீரமைப்பு நிதிகள் இல்லாமை, மக்கள் தற்காலிக முகாம்களிலும் பாதுகாப்பற்ற இடங்களிலும் சிக்கியுள்ளமை என்பன மனிதாபிமானப் பிரச்சினை மட்டுமல்ல; நாட்டின் மீட்பையே தடை செய்யும் பொருளாதாரப் பிரச்சினையும்கூட.

இந்த இடைவெளிகளை நிரப்புவது அரசின் பொறுப்பு மட்டுமல்ல. சிவில் சமூக அமைப்புகள், சமூக செயற்பாட்டாளர்கள், உள்ளூர் தலைவர்களையும் சார்ந்தது. அனைவரும் அழுத்தம் கொடுத்து தீர்வுகளை உருவாக்கவேண்டும். வேதனைகளைப் பதிவு செய்வதோடு நின்றுவிடாமல், நிர்வாகத் தீர்வுகளை வலியுறுத்தும் நிலைக்கு ஆதரவு நகரவேண்டும். மொபைல் சேவைகள் செயல்படுகிறதா, தோல்விகள் எங்கு நிகழ்கின்றன என்பதைக் கண்காணிப்பதும், பாதிக்கப்பட்டவர்களின் குரல்களை வலுப்படுத்துவதும் அவசியம்.

'தித்வா' ஒரு தனிப்பட்ட சம்பவமல்ல. காலநிலை மாற்றத்தால் உருவாகும் பேரிடர்கள் இனி அடிக்கடி நிகழும். குறுகிய கால உதவிகளில் மட்டும் கவனம் செலுத்தி, அமைப்புசார்ந்த அணுகல் பிரச்சினைகளை புறக்கணித்தால், மனிதச் செலவு பல மடங்கு அதிகரிக்கும். இந்தப் பேரிடரின் பாடம் தெளிவானது. மீட்பு என்பது உணவும் தங்குமிடமும் மட்டுமல்ல. அடையாளமும் அணுகலும் மீள வழங்கப்படும்போதே, ஒரு குடும்பம் தன் காலில் மீண்டும் எழுந்து நிற்க முடியும்.

## பேரிடர் உதவிகளுக்காக வந்திருந்த இந்திய, அமெ. படைகள் புறப்பாடு




பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இலங்கைக்கு வருகை தந்திருந்த அமெரிக்கக் குழு நேற்று நாட்டை விட்டுப் புறப்பட்டது.

தித்வா சூறாவளி, கனமழை, வெள்ளம் மற்றும் மண்சரிவு என்பனவற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி மற்றும் மீட்பு சேவைகளுக்காக அமெரிக்காவின் சி -130 விமானங்கள் இரண்டும் 60 பேர் கொண்ட குழுவினரும் 2025.12.07 இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இவர்கள் கட்டுநாயக்க மற்றும் ரத்மலான விமானப்படை தளங்களில் இருந்து யாழ்ப்பாணம், மத்தள, அம்பாறை மற்றும் அனுராதபுரம் ஆகிய பகுதிகளுக்கு உதவிப் பொருட்களை கொண்டு செல்லும் பணியிலும் மீட்புப் பணிகளிலும் ஈடுபட்டனர்.

அவர்களில் ஓர் விமானமும் அதன் பணியாளர்களும் தமது பணிகளை முடித்துக்கொண்டு நாட்டை விட்டுப் புறப்பட்டனர்.

அதேபோன்று பேரிடரின்போது மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த இந்திய உலங்கு வானூர்திகள் மூன்றும் நேற்று தமது நாட்டுக்குப் புறப்பட்டன. பேரிடர் ஏற்பட்ட உடனேயே அவற்றில் இரு வானூர்திகள் பணிக்கு வந்திருந்தன. மற்றொரு வானூர்தி டிசெம்பர் 8 வந்திருந்தது.

இந்திய மற்றும் அமெரிக்க விமானங்கள் மற்றும் பணியாளர்களை வழி அனுப்பி வைப்பதற்காக இலங்கை விமானப் படையின் தளபதி எயார் வைஸ் மார்ஷல் லசித சுமனவீர மற்றும் மூத்த விமானப்படை அதிகாரிகள் உள்ளிட்டோர் நேற்று கட்டுநாயக்க விமானப் படைத் தளத்திற்கு வருகை தந்திருந்தனர். அமெரிக்க மற்றும் இந்திய பணியாளர்களுக்குத் தங்களுடைய நன்றிகளைத் தெரிவித்து அவர்களை வழியனுப்பி வைத்தனர்.

## ஐக்கிய அரபு இராச்சிய குழுவும் நேற்று நாட்டுக்குத் திரும்பியது

நாட்டில் தித்வா சூறாவளியினால் ஏற்பட்ட மண்சரிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக வருகை தந்த ஐக்கிய அரபு இராச்சிய குழு, தனது மனிதாபிமான பணியை வெற்றிகரமாக நிறைவு செய்து நாட்டை விட்டு புறப்பட்டுள்ளது.

இந்த அவசர உதவி நடவடிக்கை, ஐக்கிய அரபு இராச்சிய அரசுத் தலைவர் ஷேக் முகமது பின் சாயித் அல் நஹ்யானின் பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

ஐக்கிய அரபு இராச்சிய உதவி குழு, மொத்தமாக 116 மெட்ரிக் தொன் அவசர மனிதாபிமான உதவிகளை வழங்கியது. இதில் உணவுப் பொருட்கள், தற்காலிக தங்குமிடங்களுக்கு தேவையான கூடாரங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கும். இவை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன், ஐக்கிய அரபு இராச்சிய தேடுதல் மற்றும் மீட்பு குழு உள்ளூர் அதிகாரிகளுடன் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் செயல்பட்டு, விசேட கள நடவடிக்கைகள் மூலம் காணாமல் போன 20 பேரின் உடல்களை மீட்டெடுத்தது. அதேபோல், சிறிய காயங்களுக்குள்ளான 8 பேருக்கு வைத்திய சிகிச்சையும் வழங்கப்பட்டது.

ஐக்கிய அரபு இராச்சிய உதவி குழுத் தலைவர், இலங்கைக்கும் இயற்கை பேரிடர்ங்களால் பாதிக்கப்பட்ட அனைத்து நாடுகளுக்கும் தொடர்ந்து ஆதரவு வழங்க ஐக்கிய அரபு இராச்சிய உறுதியாக உள்ளது என தெரிவித்தார்.

மனிதாபிமான சேவை ஐக்கிய அரபு இராச்சியத்தின் அடிப்படை கொள்கையாகும் எனவும், பாதிக்கப்பட்ட சமூகங்கள் முழுமையாக மீண்டுவரும்வரை அவர்களுடன் தோளோடு தோள் நின்று செயல்படுவதே அந்த நாட்டின் நிலையான அர்ப்பணிப்பாகும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

## 'தித்வா'வினால் 17 லட்சம் பேருக்கு இலங்கையில் கடுமையான பாதிப்பு

இலங்கையில் சமீபத்தில் ஏற்பட்ட டிட்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 22 இலட்சம் என புள்ளிவிரங்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. அவர்களுள் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 17 இலட்சம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புள்ளிவிவரங்களின்படி, சூறாவளியின் தாக்கத்தினால் பேரிடரிற்கு உள்ளான குடும்பங்களின் எண்ணிக்கை 495,000 ஆகும் என இடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் (ஓய்வுபெற்ற) மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட தெரிவித்துள்ளார்.

இதுவரை கண்டெடுக்கப்பட்டுள்ள உடலங்களின் எண்ணிக்கை 644 என்றும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 211 என்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலகங்கள் அறிவித்துள்ளன. மண்சரிவு ஏற்பட்ட பகுதிகளில் மேலும் சடலங்களைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, பாதிக்கப்பட்ட சில பிரிவினர் இடரிற்குள்ளான பகுதிகளிலிருந்து வெளியேறுவதை நிராகரித்துள்ளனர் என்றும், அவர்களை அப்பகுதிகளிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்ற ஆளும்தரப்பு எந்தவொரு ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது.

இருப்பினும், இந்த இடர்நிலைமையினால் பாதிக்கப்பட்ட சில பிரிவினர் தொடர்ந்து தமது உறவினர்களின் வீடுகளில் தங்கியிருகின்றனர் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

# ஹங்கேரி - உக்ரைன் உறவின் முரண்நகை

## டிரம்புடன் நட்பு! புட்டினுடன் தோழமை!



**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

ரஷ்யா தனது முழு அளவிலான படையெடுப்பை 2022இல் தொடங்கியதிலிருந்து ஹங்கேரி அதிபர் விக்டர் ஆர்பனின் அரசாங்கம் ஜெலென்ஸ்கி மற்றும் உக்ரேனிய நோக்கத்திற்கு எதிராக கடுமையான எதிர் நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

### உக்ரேனுக்கு எதிராக ஹங்கேரி?

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டணி இரண்டிலும் ஹங்கேரி உறுப்பினராக இருந்தாலும், ரஷ்ய படையெடுப்பைத் தடுக்க உக்ரைனின் முயற்சிகளுக்கு ஐரோப்பாவின் நிதி மற்றும் இராணுவ ஆதரவை நீண்ட காலமாக ஆர்பன் அரசு கடுமையாக விமர்சித்து வருகிறது.

போர் தொடங்கியதிலிருந்து ஹங்கேரி உக்ரைனுக்கு அனைத்து ஆயுத விற்பனையையும் நிறுத்தியுள்ளது. மேலும் உக்ரைனின் மேற்கத்திய பங்காளிகளிடமிருந்து ஆயுதங்கள் தங்கள் நாடு வழியாக செல்வதை ஆர்பனின் அரசாங்கம் தடை செய்துள்ளது.

ஹங்கேரி அதன் சொந்த பாதையைப் பின்பற்றும், அதன் தேசிய இறையாண்மையைப் பாதுகாக்கும், உக்ரைனுக்கு அதன் பணத்தை அனுப்ப மறுக்கும், மேலும் அமைதியின் புகலிடமாக இருக்கும் என்ற அறிவிப்பை ஆர்பன் அரசு சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளது. எங்களுடையது அல்லாத போர்களுக்கு நாங்கள் பணம் செலுத்த மாட்டோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

### ஆர்பன்- ஜெலென்ஸ்கி பதற்றம்:

ஆர்பனுக்கும் ஜெலென்ஸ்கிக்கும் இடையிலான பதற்றம் சமீபத்திய மாதங்களில் அதிகரித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர உக்ரைனின் முயற்சியை புடாபெஸ்ட் கடுமையாக எதிர்த்துள்ளது.

எதிர்கால ரஷ்ய ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலுக்கு எதிராக தன்னைப் பாதுகாத்துக் கொள்வதில் இந்த நடவடிக்கை ஒரு முக்கிய விடயமாக உக்ரைனிய அரசு கருதுகிறது.



ஐரோப்பிய ஒன்றிய விதிகளின் கீழ், அதன் அனைத்து தற்போதைய உறுப்பினர்களின் ஒருமித்த ஒப்புதலுடன் மட்டுமே புதிய நாடுகளை சேர்க்க அனுமதிக்க முடியும். உக்ரைனின் ஐரோப்பிய ஒன்றிய அணுகலை ஆதரிக்க ஹங்கேரிக்கு எந்த தார்மீகக் கடமையும் இல்லை. எந்த நாடும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் நுழைவதை ஒருபோதும் தடுக்கவில்லை.

இணைவது பற்றி ஐரோப்பிய ஒன்றிய ஒப்பந்தம் தெளிவின்மையாக உள்ளது. ஆனால் ஐரோப்பிய உறுப்பு நாடுகளால் ஒருமனதாக தீர்மானிக்கப்படுகிறது என்று ஹங்கேரிய அரசு தெரிவித்துள்ளது. ஆனாலும் உக்ரைனின் முயற்சிக்கு ஹங்கேரியின் எதிர்ப்பு ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஆபத்தானது என்று மேற்குலக செய்தி நிறுவனங்கள் கருத்து தெரிவித்துள்ளன.

### ஜெலென்ஸ்கி இதற்கு மேலாக

மற்றொரு நாட்டின் இறையாண்மை தேர்விலும், ஹங்கேரியின் விவகாரங்களில் தலையிட எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

### உக்ரைனில் ஹங்கேரிய ட்ரோன்?

உக்ரைன் பிரதேசத்திற்குள் சட்டவிரோதமாக ட்ரோன்களை பறக்கவிட்டதாக ஹங்கேரியை கீவ் அரசு குற்றம் சாட்டியுள்ளது. கடந்த செப்டம்பரில் உக்ரைன் வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரி சிபிஹா, ஹங்கேரிய ட்ரோன் ஊடுருவல் குறித்த ஒரு வரைபடத்தை சமூக ஊடகங்களில் வெளியிட்டார். அதில் எங்கள் ஆயுதப்படைகள் தேவையான அனைத்து ஆதாரங்களையும் சேகரித்துள்ளன. மேலும் இந்த ட்ரோன் எங்கள் வான்வெளியில் என்ன செய்தது என்பதை ஹங்கேரி விளக்குவதற்காக நாங்கள் இன்னும் காத்திருக்கிறோம் என உக்ரைனிய அரசு தெரிவித்துள்ளது.

என்னவாகினும் 2022இல் போர் தொடங்கியதிலிருந்து ரஷ்யாவிற்கு எதிராக பல சுற்று தடைகளை விதிப்பதில் ஹங்கேரி பங்கேற்றிருந்தாலும், கிரெம்ளினுக்கு அதிக பொருளாதார நிவாரணம் வழங்குமாறு ஆர்பன் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகிறார்.

பொருளாதாரத் தடைகள் பற்றிப் பேச வேண்டிய நேரம் இது. மேற்குலக நாடுகள் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார்களா? இல்லை. ரஷ்ய பொருளாதாரத்தை முடக்கினார்களா? இல்லை. ஐரோப்பா மற்ற மலிவு விலை மூலங்களிலிருந்து ரஷ்ய எரிசக்தியை மாற்ற முடிந்ததா? இல்லை, என்று விக்டர் ஆர்பன் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய பிரஸ்ஸல்ஸ் அதிகாரத்துவத்தினரால் உருவாக்கப்பட்ட தடைகள் ஒரு விஷயத்தை அடைந்தன. குறிப்பாக அவை ஐரோப்பிய பொருளாதாரத்தின் போட்டித்தன்மையை அழித்துவிட்டன என்று விக்டர் ஓர்பன் சாடியுள்ளார்.

### ரஷ்ய எரிசக்தியை நம்பும் புடாபெஸ்ட்:

புட்டினின் போருக்கு நிதியளிக்கும் திறனைக் குறைக்க திரு. டிரம்ப் மற்றும் ஜெலென்ஸ்கி இருவரும் பலமுறை அழைப்பு விடுத்த போதிலும், பல ஆண்டுகளாக ரஷ்ய எண்ணெய் மற்றும் எரிவாயுவை நம்பியிருப்பதில் இருந்து தங்களைத் தாங்களே விலக்கிக் கொள்ள மற்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மேற்கொண்ட முயற்சிகளை புடாபெஸ்ட் மீறியிருக்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் ஹங்கேரி உண்மையில் ரஷ்ய எரிசக்தியை நம்பியிருப்பதை அதிகரித்துள்ளது என்பதை சில ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. 2022க்கு முந்தைய மொத்த இறக்குமதியில் 61% ஆக இருந்த ஹங்கேரியின் ரஷ்ய மசகு எண்ணெய் கொள்முதல், 2024 ஆம் ஆண்டில் 86% ஆக அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

### ஓர்பன் டிரம்பின் முக்கிய கூட்டாளி?

ஹங்கேரி உக்ரைனுடன் நட்புறவாகக் கருதப்படவில்லை என்றாலும்,



ஜனாதிபதி டிரம்ப் புடாபெஸ்டில் அன்பான வரவேற்பைப் பெறுவார்.

2016 ஆம் ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான திரு. டிரம்பின் முதல் வெற்றிகரமான முயற்சியை பகிரங்கமாக ஆதரித்த முதல் மற்றும் ஒரே ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் விக்டர் ஓர்பன் ஆவார். அன்றிலிருந்து இருவரும் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளனர்.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் படி ஹங்கேரிய நாடாளுமன்றத்தில் தனது கட்சியின் பெரும்பான்மையைப் பயன்படுத்தி நாட்டின் நீதித்துறையின் சுதந்திரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தவும், சுதந்திர ஊடகங்களை ஒடுக்கவும், புலம்பெயர்ந்தோரை அரக்கத்தனமாக சித்தரிக்கவும், ஸிறுயவீஞ மக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டவும் முயற்சிப்பதாக ஓர்பன் அரசுக்கு எதிராக பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

2022 ஆம் ஆண்டின் இறுதியில் ஓர்பனின் தலைமையின் கீழ் ஹங்கேரியை இனி முழுமையான ஜனநாயக ஆட்சி என்று கருத முடியாது என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறியது, இதனை தேர்தல் எதேச்சதிகாரத்தின் கலப்பின ஆட்சி என்று கூறியது.

ஆனாலும் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஓர்பனின் வலிமையான தலைமையைப் பாராட்டியுள்ளார். அவரை ஒரு சிறந்த மனிதர் மற்றும் மிகவும் சிறப்பு வாய்ந்த நபர் என்றும் நெருக்கமான ஒரு உறவு பேணி வருகிறார்.

### கிரெம்ளின் நண்பரா ஹங்கேரி?

உக்ரைனில் ட்ரோன் ஊடுருவலை ஹங்கேரிய அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

அதே நேரத்தில் உக்ரைனின் இறையாண்மையையும், சுதந்திரத்தையும் கேள்விக்கு உள்ளாக்கி உள்ளது. கிரெம்ளினை அடிக்கடி ஊக்குவிக்கும் ஆதரவான ஒரு பேச்சுப் பொருளை ஹங்கேரிய அரச ஊடகங்கள் எதிரொலிப்பது இதற்கு சான்றாகும்.

ஆயினும் உக்ரைனில் சில மீட்டர்கள் ட்ரோன் பறந்தது என்று வைத்துக்கொள்வோம், அதனால் என்ன என்று ஓர்பன் அரசு கூறியதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. உக்ரைன் ஒரு சுதந்திர நாடு அல்ல. உக்ரைன் ஒரு இறையாண்மை கொண்ட நாடு அல்ல. உக்ரைன் எங்களால் போரில் நிதியளிக்கப்படுகிறது. மேற்கு நாடுகள் அதற்கு நிதி, ஆயுதங்களை வழங்குகின்றன என்றும் ஹங்கேரிய அரசு கடுமையாக சாடியுள்ளது.

உக்ரைனின் வெளியுறவு அமைச்சர் சிபிஹா, ஒரு சமூக ஊடகப் பதிவில், விக்டர் ஓர்பனின் கருத்துக்கள் அவர் ரஷ்ய பிரச்சாரமானது வொட்கா போதையில் இருப்பதை காட்டுவதாக நையாண்டி செய்துள்ளார்.



## நெருக்கடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

உதவிவழங்கல்தொடர்பில்சுற்றறிக்கைகள் மாத்திரமே வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் தரப்படுத்தல் விதிகள் ஏதும் வெளியிடப்படவில்லை. அரசுத் தலைவர் தேர்தல் காலத்தில் தேர்தல் பரப்புரை மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளைப் போன்றுஉதவிக்கொடுப்பனவுஅறிவிப்புகளும் அமைந்து விடக்கூடாது.

தற்போதைய நெருக்கடி நிலைமை மற்றும் மக்களுக்கு உதவியளிப்பது குறித்து அரசுத் தலைவருக்கும், ஆளும்தரப்புக்கும் ஆலோசனை வழங்க தயாராகவே இருக்கிறோம். தற்போதைய நெருக்கடியான நிலையில் இருந்து மீள்வதற்கு எடுக்கும் நடவடிக்கைகளை வெற்றிப் பெறச் செய்ய வேண்டுமாயின்ஆளும்தரப்புஎதிர்;கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்.

## உதவிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களை விமானத்திலிருந்து இறக்கிய பின்னர், மஹியங்கனை பிரதேசத்தில் கள வைத்தியசாலை ஒன்றை நடத்தி வந்த 85 பேர் கொண்ட மருத்துவமனைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் மருத்துவ உபகரணத் தொகுதியையும் ஏற்றிக்கொண்டு விமானம் அங்கிருந்து வெளியேறியது.

நாடு திரும்பிய இந்திய மருத்துவக் குழுவினரை வழியனுப்பி வைப்பதற்காக சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தந்திருந்தார்.

இந்த இந்திய மருத்துவர்கள் உள்ளிட்ட மருத்துவமனைப்பணியாளர்கள்அத்தியாவசிய அறுவை சிகிச்சைகள் உட்பட 7,000 நோயாளர்களுக்கு மருத்துவ சிகிச்சைகளை வழங்கியுள்ளனர்.

## பேரிடர் உதவி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டனர்.

வெருகல் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டமக்கள்பிரதானநுழைவாயிலை மறித்துப் போராடினர். இதனால் பொலிஸார் குதிக்கப்பட்டு பிரதேச செயலகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குமாறும்விரைவாகக்கொடுப்பனவுகளை வழங்குமாறும் குரல் எழுப்பிய மக்கள் பிரதேச செயலாளரை வெளியே விடாது தடுத்துப் போராட்டம் நடத்தினர். பின்னர் உதவிப் பொருள்களை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் உத்தரவாரம் வழங்கியதை அடுத்துப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

## உதவிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:

2025.11.21 முதல் தாக்கம் செலுத்திய திட்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரிடர் நிலமையை அடிப்படையாகக் கொண்டு 2025.11.28 அன்று விசேட வர்த்தமானி அறிவுறுத்தல் ஊடாக முழு இலங்கைக்கும் அவசரகால நிலமை அமுல்படுத்தப்பட்டதுடன், அன்றைய தினம் பேரிடர் உதவி சேவை சுற்றறிக்கையின் 03/2025 ஊடாக 2025.11.21 முதல் மறுஅறிவித்தல் விடுக்கும் வரையில் இலங்கை முழுவதும் பேரிடர் நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இந்த பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளித்தல், உயிரிழப்புக்கு இழப்பீடு வழங்கல், முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கல் உட்பட பல உதவிகள் 2025.12.05 வெளியிடப்பட்ட செலவு சுற்றறிக்கை 08./2025 ஊடாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டலுக்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு மற்றும் அரச நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

உதவி வழங்கலுக்காக சம்பந்தப்படும் நிறுவனங்களின் பொறுப்புக்கள்.

இந்த சுற்றறிக்கை ஊடாக நிச்சயிக்கப்படும் கொடுப்பனவு மற்றும் உதவிக்கமைய பேரிடர் சேவை வழிகாட்டல், 01/2025,2,1 பிரகாரம் கிராமிய பேரிடர் முகாமைத்துவம் மற்றும் உதவி சேவை குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளருக்கு ஒத்துழைப்பு வழங்கும்பொருட்டுகாணப்படும்மாதிரிகளுக்கு மேலதிகமாக நிர்வாக கிராம சேவகர், சமூக சேவை உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், சிறுவர் காப்புறுதி உத்தியோகத்தர், வயது முதிர்ந்தோர் மேம்பாட்டு உத்தியோகத்தர், கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறு வர்த்தக அபிவிருத்தி உத்தியோகத்தர், பௌத்த விவகார உத்தியோகத்தர், சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், வீடமைப்பு உத்தியோகத்தர், ஏனைய துறை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு பொறுப்பு வழங்கப்படுகிறது.

### வழங்கப்படும் கொடுப்பனவு மற்றும் உதவி

பேரிடர் நிலமையால் பாதிக்கப்பட்டவர்கள் தமது வீடுகளுக்குச் சென்று துப்பரவு பணிகளை மேற்கொள்வதற்கு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும். சொந்த வீடு மற்றும் வாடகை வீடுகளில் வசிப்பவர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

### இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் தகுதி

2025.11.21 முதல் ஏற்பட்ட பேரிடர் நிலமையால்முழுமையாகச்சேதமடைந்தவீடு, வெள்ளம், சூறாவளி, மண்சரிவு, மண்மேடு சரிந்து விழுந்ததால் ஏற்பட்ட பகுதியளவிலான பாதிப்பு, வீட்டுக்கு சேதம் ஏற்படாத பட்சத்தில் வெள்ளம், சூறாவளி, மண்சரிவு ஆகிய தாக்கங்களில் அசுத்தமடைந்த வீட்டைத் துப்பரவு செய்வதற்காக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

### காணியின் உரிமை

காணியின் உரிமை மற்றும் வருமானம் ஆகிய காரணிகளை கருத்திற் கொள்ளாமல் இந்தக் கொடுப்பனவை வழங்கவேண்டும்.சொந்த வீடு,வாடகை வீடு, சட்டவிரோத குடியிருப்பாளர்கள், அரச உத்தியோகபூர்வ வீடுகளில் வசிப்போருக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்.

### பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கொடுப்பனவு

பேரிடரால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் கொப்பிகள், எழுதுவினைப் பொருட்கள்மற்றும்சீருடைகளைகொள்வனவு செய்வதற்கு ஒருதடவை மாத்திரம் ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட அல்லது கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட வகையில் பரிந்துரை செய்யப்படும் மாதிரி 2.7 விண்ணப்பத்துக்கு அமையத் தயாரிக்கப்பட்டு 2.7.1 (பிரிவு) மாதிரி ஊடாக பிரதேச செயலாளர் அலுவலகம் ஊடாக மாவட்ட செயலாளர் காரியாலயத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

இந்தக் கொடுப்பனவை வழங்கத் தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களின் பெயர் பட்டியல் தேசிய பேரிடர் சேவை மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

### வாடகை வீட்டில் வசிக்க ஆறு மாத காலத்துக்கு 25 ஆயிரம் ரூபா

மண்சரிவு அல்லது வெள்ளப்பெருக்கு பாதிப்பால் வசிப்பதற்கு வீடில்லாதவர்கள் புதிய வீட்டை நிர்மாணித்துக் கொள்ளும்வரை பிறிதொருஇடத்தில்குடியிறுப்பதற்கு25ஆயிரம் ரூபா ஆறு மாத காலத்துக்கு வழங்கப்படும். தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் வசிப்பதற்கு பாதுகாப்பற்ற பகுதி என்று அறிவுறுத்தப்பட்ட பகுதியில் வசித்தோருக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படும். வாடகை வீட்டில் வசித்தோருக்கு இந்த கொடுப்பனவு வழங்கப்படாது.

## அரசுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கலானதுமான செயல்முறையாக காணப்பட்ட அரசுத் தலைவர் நிதியத்தை, இணையவழியிலும் தத்தமது பிரதேச செயலகங்கள்ஊடாகவும்விண்ணப்பிக்கக்கூடிய எளிய முறைமைக்கு கொண்டுவர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம் என பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

இந்தச் செயற்திட்டங்கள் அனைத்தையும் நாம் மேற்கொள்வதுஇ நமது மனித வளத்தை தற்போதைய உலகிற்கு ஏற்றவாறு மேம்படுத்தி, முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காகவே ஆகும். இன்றைய உலகின் சிக்கலான தன்மைகளைப் புரிந்துகொண்டு பயணிக்கக்கூடிய மனித வளத்தை உருவாக்க ஓர் ஆளும்தரப்பு என்ற வகையிலேயே நாம் இந்தநடவடிக்கைகளைமுன்னெடுக்கின்றோம்.

அரசுத் தலைவர் நிதியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் உயர்தரப் பரீட்சை சாதனையாளர்களைப் பாராட்டும் நாடு தழுவிய நிகழ்ச்சியின் ஒன்பதாவது கட்டம், பிரதமர் ஹரிணி தலைமையில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன்போது, 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மேல் மாகாண மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 361 சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் பாராட்டப்பட்டனர். இவர்களுக்கு அரசுத் தலைவர் நிதியத்தினால் 36.1 மில்லியன் ரூபாய் பெறுமதியான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

விழாவில் உரையாற்றிய பிரதமர் கலாநிதி ஹரிணி, அரசுத் தலைவர் நிதியம் மக்களின் நிதியம் , அது மக்களுக்குச் சொந்தமானது என்ற உணர்வை ஏற்படுத்த ஆளும்தரப்பு விசேடமுயற்சிகளைமேற்கொண்டுவருகிறது.

இதுவரை, விசேட அதிகாரம் அல்லது பதவிகளை வகிப்பவர்களுக்கு மாத்திரம் நன்மையைப்பெறுவதற்கு இலகுவாகஇருந்த, சாதாரணமக்கள்பயனடைவதுகடினமானதும் சிக்கலானதுமான செயல்முறையாக காணப்பட்ட அரசுத் தலைவர் நிதியத்தை, இணையவழியில் மற்றும் தத்தமது பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பிக்கக்கூடிய எளிய முறைமைக்கு கொண்டுவர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்தச் செயற்திட்டங்கள் அனைத்தையும் நாம் மேற்கொள்வது, நமது மனித வளத்தை தற்போதைய உலகிற்கு ஏற்றவாறு மேம்படுத்தி, முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காகவே ஆகும். இன்றைய உலகின் சிக்கலான தன்மைகளைப் புரிந்துகொண்டு பயணிக்கக்கூடிய மனித வளத்தை உருவாக்க ஒரு ஆளும்தரப்பு என்ற வகையிலேயே நாம் இந்தநடவடிக்கைகளைமுன்னெடுக்கின்றோம்.

அந்தநோக்கத்திலேயே2026ஆம்ஆண்டு முதல் கல்வி முறையில் ஒரு மாற்றத்தை கொண்டுவர விசேட வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். உற்பத்தித்திறன் மிக்க நல்ல மக்கள் கூட்டத்தினரை உருவாக்குவதே எமது நோக்கமாகும். சுற்றுச்சூழலை நேசிக்கும், அதனைப் பாதுகாப்பதில் முன்னிற்கும்,தலைமைத்துவப் பண்பு கொண்ட, கருணை மற்றும் கூட்டுமுயற்சி பற்றிய உணர்வுள்ள, ஜனநாயகத்தை மதிக்கும் பொறுப்புமிக்க மனித வளத்தை உருவாக்குவதே எமது தேவையாக இருக்கின்றது.

சகல ஆளும்தரப்புகளும் உங்கள் கல்விக்காகப் பங்களித்துள்ளன. இந்தப் பங்களிப்பு, நாட்டின் அனைத்து மக்களினதும் வரிப்பணத்திலிருந்தேமேற்கொள்ளப்படுகிறது. ஆகையினால் அந்தச் சமூகத்திற்காகச் சேவையாற்றவும், தலைமைத்துவத்தை வழங்கவும்கூடிய திறமையானவர்கள் நீங்கள் என்பதாலேயே, நீங்கள் எமக்கு மிகவும் பெறுமதியானவர்களாகின்றீர்கள்.

இன்று வழங்கப்படும் இந்த மதிப்பளிப்பானது, நாம் உங்களுக்குகாக மேற்கொள்ளும் ஒரு முதலீடாகும். ஆளும்தரப்பின் பங்களிப்பில் கல்வி பயின்று, ஆளும்தரப்பின் பங்களிப்பினால் பாராட்டுப் பெறும் நீங்கள், சமூகத்திற்காக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இருக்கின்றது - என்றார்.

இந்த விழாவில் கருத்துத் தெரிவித்த தொழில் அமைச்சரும், நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த, மாரடைப்பு போன்ற கடுமையான நோய்களுக்கு நிதி உதவி பெறக்கூடிய நிதியமாகவே மக்கள் மத்தியில் அரசுத் தலைவர் நிதியம் பிரபலமாக இருந்துவந்தது. ஆயினும் புதிய ஆளும்தரப்பின் கீழ், அதன் பயன்பாட்டுக்கான செயற்பரப்பு விரிவாக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு அமைய கல்வியையும் ஒரு விசேட துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

மேலும், எவரையும் கைவிடாது அனைவரையும் உள்வாங்க வேண்டும் என்ற ஆளும்தரப்பின் தொலைநோக்குப் பார்வையும் அரசுத் தலைவர் நிதியமும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளன - என்றார்.

இந்த நிகழ்வில் அரசுத் தலைவரின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் மற்றும் அரசுத் தலைவர் நிதியத்தின் செயலாளர் ரோஷன் கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்தன சூரியஆரச்சி, சந்திம ஹெட்டியாராச்சி, லெப்டினன்ட் கொமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க, மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், அரசுத் தலைவர் நிதியத்தின் முகாமைத்துவ சபை அதிகாரிகள், அரச அதிகாரிகள், புலமைப்பரிசு பெற்ற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள்ஆகியோர்கலந்துகொண்டனர்.

## நாளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படக்கூடும்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது ஏற்படக்கூடிய தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படும் விபத்துக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com




JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர் Kalaikkathir







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.12.2025இல் வெளியிடப்பெற்றது